முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 19 /2023

தேதி : 14.11.2024

(வா.சா.1) – திரு.கணேசன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் சரியானது என்றால் ஆமாம். வழக்கு சொத்து பழனி வட்டம், புஸ்பத்தூர் கிராமத்தில் உள்ளது என்றால் ஆமாம். நான் வட்டிக்கு பணம் கொடுத்ததால்தான் சொத்து எந்த கிராமத்தில் இருக்கிறது என்று தெரியாமல், பழனி வட்டம், அய்யம்பாளையம் கிராமத்தில் இருப்பதை புஸ்பத்தூர் கிராமம் என்று சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து விவசாய நிலமா அல்லது கிணற்று பக்கத்தில் இருக்கும் காலி நிலமா என்றால் விவசாய நிலம்தான். வழக்கு சொத்து பிரதிவாதி சிவக்குமாருக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். நான் சொல்வது தவறு என்றும், சிவக்குமாருக்கு தனித்து பாத்தியப்பட்டது அல்ல என்றும், அது பொது சொத்து என்றால் சரியல்ல. பொதுச்சொத்து என்பதால்தான் வேலுச்சாமி கவுண்டர் மகன் ரெங்கசாமி கவுண்டர், பழனிச்சாமி மகன் ராஜேந்திரன், தண்டபாணி மகன் பிரதிவாதி சிவக்குமார், தங்கத்துரை மனைவி சுதாமணி, சேமலையப்பன் மகன் சிவானந்தம் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம்.

வழக்கு சொத்தின் நான்குமால் என்ன உள்ளது என்றால் வடக்கு – கிணறு, கிழக்கு – சிவக்குமாருக்கு பாத்தியப்பட்ட இடம், தெற்கு – சிவக்குமாருக்கு பாத்தியப்பட்ட சாளை (தோட்டத்துசாளை) மேற்கு – தோட்டம் உள்ளது. நான் சொல்கிற இந்த நான்குமால்கள் தவறு என்றும், கடனுக்காக கிரைய ஒப்பந்தம் எழுதி வாங்கியததால்தான் சொத்தின் விபரங்கள் எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி சொத்திற்கு அருகில் எனக்கு சொத்து இல்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் அருகில் எனக்கு சொத்து இருந்தால்தான் வழக்கு சொத்தான

கிணற்றை சுற்றி இருக்கிற இடத்தை வாங்க முடியும் என்று சொன்னால் சரியல்ல.

/2/

கிரைய ஒப்பந்தம் போட்டதாக சொல்லப்படும தேதியிலிருந்து தற்பொழுது வரை அந்த சொத்தில் வில்லங்கம் இல்லை என்று சொன்னால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் காலக்கெடு எத்தனை ஆண்டுகள் போடப்பட்டுள்ளது என்றால் 2 ஆண்டுகள். 29.09.2022 அந்த காலக்கெடு முடிவாகிறது என்றால் ஆமாம். இடைப்பட்ட காலகட்டத்தில் சொத்தை கிரையம் வாங்குவதற்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் ஆமாம். 2 ஆண்டுகளுக்குள் நான் கிரையம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அந்த கிரைய ஒப்பந்தம் ரத்தாகிவிடும் என்று கிரைய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். கிரைய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ள காலக்கெடு காலாவதியாகிவிட்டது என்றால் சரிதான். எனவே நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் கடனுக்காகத்தான் கிரைய ஒப்பந்தம் போடப்பட்டதே தவிர கிரையம் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் பிரதிவாதி அந்த ஆவணத்தை எடுத்து தரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**Sd/.K.Renugadevi**
**Principal Sub Judge,**
Palani.